www.tamilarangam.net

# பொய்ப் பிரச்சாரங்களும் போலி வேசங்களும்

''வீர புருஷர்கள் வரலாற்றை உருவாக்கினர்கள். அவர்களின் அதிவேக அசகாய் சூரத்தனத்தினல் அரசாங்கமே ஆட்டம் கண்டது. ஆளும் வர்க்கம் கிலி கொண்டது. ஆகா! பட்டிவிக்கிரமாதித்தன்களும், பழுவேட்டையர்களும் மறு பிறப்பு எடுத்துவந்து மாண்டுகொண்டிருக்கும் ஈழத்தமிழர்களை மீட்கப் புறப்பட்டு விட்டனர்''..........................என்கின்ற ஒரு மாய நிலையை கலை அம்சம் கொண்ட (அ-து ரசிப்புத்தன்மையுள்ள) கற்பனை உற்சாகத்தை 1976-இல் இருந்து தமிழ் மக்கள் இன்றுவரை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றனர். உண்மையில் இச் சிறு சிறு நிகழ்வுகள் தவருன ஒரு போக்கு அல்ல. ஆனல், அதையே தமது வெற்றி என்றும், போராட்டத்தின் இறுதி வடிவம் என்றும் பீற்றித்திரிந்து உரிமை கொண்டாடி - அறிக்கைவிட்டு அகமிக மகிழ்ந்து தாமும் தவருன நிலைப்பாட்டில் இருந்துகொண்டு, தமது தவருன நிலைக்கு மக்களையும் இட்டுச் செல்வதுதான் மிக மிக முட்டாள்தனமான போக்கு ஆகும். ஒடுக்கு முறையில் சிக்குண்டு இருக்கும் இனமானது தம்மை முழுமையாக விடுவிக்கவேண்டி நடத்த இருக்கும் போராட்டத்தின் தயாரிப்பில் உருவாகும் சிறு தடங்கல்களை முறியடிக்கும் அவசியமான சிறு சிறு தூசு தட்டல்களை பெருமையாகவும் முழுமையாகவும் எண்ணி அதில் கிடைக்கும் கைத்தட்டல்களுடன் திருப்திபடுவதும் 'திமிர்' கொள்வதும் அரை வேக்காட்டுத் தன்மான அறிவிலி நிலையாகும். சரி, இவ்வாருன நடவடிக்கைகளை பெருமை அடித்துத் திரிவதுதான் தப்பு என்ருல், இரவல் புடவையிலே இது நல்ல கொசுவம் என்று யார் யாரோ நிகழ்த்தும் தாக்குதல்களை தாமே நிகழ்த்தியதாக பொய்ப் பிரசாரம் செய்வதும், அதையிட்டு சக இயக்கங்களை மிரட்டுவதும் மிக மிக மிலேச்சத்தனமான அரசியல் தில்லுமுல்லு ஆகும். ஜூலை 11—7—84 அன்று வெளியிட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ''சிறீலங்கா அரசின் பொய்யான பிரச்சாரம்'' என்ற பிரசுரத்தில் தமது தலைப்பின் பின் பகுதியை செயல்படுத்தியுள்ளது. அ-து அம்பாறை சென்ட்ரல் காம்ப் காவல் நிலையத் தாக்குதலை தாமே நடத்தியதாக பொய் புளுகி பெருமை அடித்துள்ளது. இது மிகவும் அயோக்கியத்தனமான கீழ்த்தரமான அரசியல் செப்பிடு வித்தையாகும். பாராளுமன்ற அரசியல்வாதிகளின் பரம்பரைக் கபடத்தனத்தை யொத்தது. சிவகுமாரன், இந்தியாவில் பகத்சிங், போன்ருேரை பாராளுமன்ற அரசியல்வாதிகள் தமது தொண்டர் என்ற வகையில் பிரச்சாரம் செய்வது மக்களை ஏமாற்றும் கைங்கரியம் போன்றது. மக்களின் விடுதலைக்கு கழகம் அமைப்பவர்கள் தமிழ் நாட்டில் உள்ள

www.tamilarangam.net

கழகங்களுடன் கூடியவுடன் அதே பாணி அரசியலைக் கடைபிடிக்கத் தொடங்கி விட்டனர் போலும். அரசியல் என்ற புனிதம் மக்களுக்காக மக்களுக்கு நல்வழி காட்டுவதற்கே ஒழிய, மக்களை ஏமாற்றி, தமக்காகவும், தம்மைப் பெருமைப் படுத்துவதற்காகவும் இல்லை. இதே பாணி அரசியல் முன்னர் மட்டு நகர் சிறையுடைப்பின் பொழுதும் எழுந்தது. உண்மையில் மட்டு நகர் சிறையுடைப்பு, உள்ளேயிருந்த கைதிகளினதும் ஜெயிலர்களினதும் முனைப்பான முயற்சியின் உதவியுடனும், வெளியே உள்ள சில அமைப்புகளின் வழிகாட்டுதலின் மூலமும் நடந்த நன் முயற்சி. ஆனால், தமிழ் நாடு சென்று ஏட்டிக்குப் போட்டியாக ஒவ்வொரு இயக்கமும் பேட்டி கொடுப்பதும், தமக்குள் பிகுபண்ணுவதுமாக நடந்து தமிழ் நாட்டு மக்கள் நம்மீது எள்ளி நகையாடுமளவுக்கு செய்து கொண்டனர். ஏதோ ஆட்சியைப் பிடித்துவிட்டோம் என்ற நினைப்பில் மிதந்து திரிந்தனர். இவை போன்ற நினைவுகள் நீண்ட போராட்டத்தின் சிறு சிறு முன் முயற்சிகளே தவிர இறுதி வடிவம் அல்ல. வளர்ந்துவரும் ஒடுக்குமுறைக்கு — (சியோனிச ஒடுக்கு முறை, அரசின் அயோக்கியத்தனப் பிரச்சாரம், தமிழ் மக்களை திசை திருப்பி கனவுலகத்திற்கு அரசும், ஆளும் வர்க்கமும் எடுக்கும் முயற்சிகள்) எதிராக சகல இயக்கங்களும் ஒத்த தன்மையுடன் தமக்குள் சச்சரவில் இறங்காமல், முரண் பாடுகளை, வெளிப்படையான விமர்சனங்களை மக்கள் முன்பு வைத்து போராட் டத்தை முன் எடுத்துச் செல்லாமல் பின்னுக்குத் தள்ளுவதும்-முட்டுக்கட்டை போடு வதும் மாபெரும் தவறு. பாராளுமன்றக் கட்சிகள்தான் மிகக் கீழ்த்தரமாக ஒருவரை ஒருவர் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்றிப் பதவிக்கு வருவார்கள். இது எம்போன்ற விடுதலை அமைப்புகளுக்கு முற்றிலும் முரணான, புனிதம் கெட்ட செயலாகும். தளத்தில் போராடாமல் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து 'தம்பட்டம்' அடித்துத் திரிவது ஒருபோதும் விடுதலைக்கு வழிவகுக்காது. மாறாக இந்திய அரசின் பிடிக் குள் அவர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்குள் அகப்படும் முயற்சியாகும். தளத் தில் போரிடுவதற்கு, மக்களுக்கு வழிகாட்டி மக்களையே போராட வைப்பதற்கு திராணி இல்லாதவர்கள் - எம்மால் முடிக்கக் கூடியது இவ்வளவுதான் என்று கூறிவிட்டு, அவரவர் பிழைப்பில் செல்வது போராடும் மக்களுக்குச் செய்யும் பேருதவியாகும். அதை விடுத்து இந்திய ராணுவம் வருகிறது என்று மக்களைப் பார்வையாளர் ஆக்குவது படுபிற்போக்குத்தனமான முயற்சியாகும். இது தமிழீழ மக்களையும், தமிழ் நாட்டு மக்களையும் காதுல பூ வைத்தவர்கள் என்ற நிலைக்கு இட்டுச் செல்வதாகும். எனவே, மக்களை ஏமாற்றும் கபட அரசியலை விட்டு மக்களுக்காக மக்களையே போராட வைக்கும் புனித அரசியலை நோக்கி வரும்படி தோழமையுடன் வேண்டுகின்றோம்.

தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை.